<u>தொழிற்தீர்ப்பாயம், சென்னை</u>

<u>O.P. No. 26 of 2021</u>

Cross of WW1, Mr.Saravanan, Date : 12.09.2023

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை,

நான் இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட தொழிலாளி ஆவேன். மனுதாரர் தொழிற்சங்கம் சுமைதூக்கும் தொழிலாளர்களுக்காக செயல்படும் சங்கம் ஆகும். நானும் ஒரு சுமைதூக்கும் தொழிலாளி என்றால் சரிதான். எனக்கு பணி செய்யும் நாட்களுக்கு மட்டுமே எடையின் அடிப்படையில் கூலி வழங்கப்படுகிறது. இதை தவிற எங்களுக்கு Gratuity, Bonus, PF, EDLI, Weekly Holiday wages, Pongal Gift ஆகியவை எனக்கு வழங்கப்படுகிறது என்றால் சரிதான். பச்சை அட்டை தொழிலாளர்களுக்கு அது வழங்கப்படுகிறது. இளஞ்சிவப்பு அட்டை தொழிலாளர்களுக்கு தேசிய மற்றும் பண்டிகை கால விடுமுறை 10 நாட்கள் வழங்கப்படாது மற்றும் Weekly Holidays wages, Gratuity வழங்கப்படாது. சுமைதூக்கும் தொழிலாளர்கள் என்னென்ன வேலை செய்வார்கள் என்றால், லாரியில் வரும் மூட்டைகளை இறக்கி வைப்பது மற்றும் பொது விநியோக திட்டத்தில் ஏற்றப்படும் மூட்டைகளை முதலில் பிரித்து எடையிட்டு சரிசெய்து தைத்து பிறகு ஏற்ற வேண்டும். அரிசி, கோதுமை, சர்க்கரை, பாமாயில் எண்ணெய், பருப்பு வகைகள், கொண்ட கடலை ஆகிய பொருட்கள் வரும். இன்றைய தேதியில்

தொ.சா.ஆ.4 ன் அடிப்படையில் தான் எங்களுக்கு கூலி வழங்கப்படுகிறது என்றால் சரிதான். மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு வகையான பணிக்கும் தனித்தனியாக கூலி நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழங்கப்பட்டுள்ள ஆணையில் சில பணிகளுக்கு கூலி வழங்கப்படுவதில்லை என்று சாட்சி தாமாக முன்வந்து சொல்கிறார். இந்த விவரம் எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் கூறவில்லை. இந்த வழக்கில் Food Corporation of India (FCI) நேரடி பணபட்டுவாடா நடைமுறையின்படி (Direct Payment System–DPS) வேலை செய்யும் Handling Labour களுக்கு வழங்கப்படும் கூலியை எங்களுக்கு வழங்கவேண்டும் என்பது தான் எங்களின் கோரிக்கை என்றால், சரிதான். அது எங்களின் இரண்டாவது கோரிக்கை. FCI ல் பணிபுரியும் Handling Labour செய்யும் அதே பணியை தான் நாங்கள் செய்துவருகிறோம் என்ற அடிப்படையில் அவ்வாறு கேட்கிறோமா என்றால் நாங்கள் அதைவிட அதிகமாக பணி செய்கிறோம். Handling Labour நாங்கள் செய்யும் ஏற்றுவதும் மற்றும் இறக்கும் வேலை தவிற வேறு பணிகள் செய்வதில்லை என்று பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மற்ற பணிகளை FCI ல் வேறு யார் செய்துவருகிறார்கள் என்று பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. FCI ல் பணிபுரியும் Handling Labour செய்யும் பணியை நான் சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். எந்த இடத்தில் எந்த தேதியில் சென்று பார்த்தேன் என்று பிரமாண வாக்குமூலத்தில்

கூறியுள்ளேனா என்றால் இல்லை. FCI ல் உள்ள தொழிற்சங்கத்துடன் தொடர்பில் உள்ளேனா என்றால் இல்லை. எங்கள் தொழிற்சங்கத்தில் திரு.கே.பாஸ்கர், திரு.தெய்வேந்திரன், திரு.ஏ.முனுசாமி ஆகியோரின் சம்பள பட்டியலை என்னுடைய கடந்த 6 மாத சம்பள பட்டியலை தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். அடுத்த வாய்தாவில் தாக்கல் செய்கிறேன்.

வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.